Registered as a News Paper     பக்கங்கள் 04     விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     வைகாசி 03     [16-05-93]     ஞாயிற்றுக்கிழமை     ஓசை 87

## 2000 ஆம் ஆண்டில் இலங்கையில் 50 ஆயிரம் எயிட்ஸ் நோயாளர்

2000 ஆம் ஆண்டளவில் இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்துக்கும் அதிகம் ஆகுமென்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இந்தியா, தாய்லாந்து போல தொற்று நோய்நிலையைஇந்நோய்அடைந்துவிடவில்லைஎன்றும் நிபுணர்கள்தெரிவித்தனர். மேகநோய்த் தடுப்புப் பிரிவினர் தகவல் தருகையில் இதுவரை இலங்கையில் 92 எயிட்ஸ் நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். இவர்களில் 19 பேர் வெளிநாட்டவர்கள் ஆவர். இலங்கையர்களான 22 பேர் எயிட்ஸ் நோய் காரணமாக இறந்துள்ளனர். முதலாவது எயிட்ஸ் நோயாளி 1981ஆம் ஆண்டு அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டார். இந்த ஆட்கொல்லி நோய் 159 நாடுகளில் பரவியுள்ளது இலங்கையின் முதலாவது (4ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த யாராவது உதவின் அது மகத்தான செயல்

## எதிரணி ஆட்சி அமைக்கும் மாகாணங்களுக்குநிதிவெட்டு

### டி. பி. விஜயதுங்க எச்சரிக்கை

(கொழும்பு)

எமக்குப் பிரச்சினைகளை அல்லது சங்கடங்களை ஏற்படுத்தும் எதிர்க்கட்சியினரின் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாவனல்லயில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்லுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, "மாகாணசபைத் தேர்தலினால் ஆட்சியை மாற்றியமைக்க முடியாது. பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாரும் எதுவும் கூறத்தேவையில்லை. பாராளுமன்றத்தேர்தல் குறிப்பிட்ட திகதியில் நடந்தே தீரும். இதுதொடர்பான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எனக்கே உண்டு."

"பாராளுமன்றத் தேர்தல் 1995ஆம்ஆண்டு மார்ச்மாதம் நடைபெறும். அதுவரையும் நானே தொடர்ந்து நிதியமைச்சராக இருக்கப் போகிறேன். அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகள் பிரச்சினைகளைத் தோற்றுவித்தால் அப்பகுதியின் அபிவிருத்திக்கு நிதிஎதுவும் ஒதுக்கப்படமாட்டாது" என்றார்.

## ஜனாதிபதி விஜயதுங்க கோரிக்கை

[கொழும்பு]

வடக்கு, கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த உதவ எவரேனும் முன்வந்தால் அது மகத்தான செயலாகும் என்று சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.



கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்நாட்டின் பெரும் பிரச்சினையான வடக்குக் கிழக்கு பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்படல் வேண்டும், தீர்வுக்கான வழியும் பேச்சுவார்த்தை தான். ஆனால் அதற்கான வழி எது என்பதே இப்போதுள்ள கேள்வியாகும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு.கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் பிரபாகரனுடன் பேச்சு நடத்துவதற்கு எவரேனும் உதவ முன்வருவார்களேயானால் அது மிகவும் உன்னதமானதாகக் கருதப்படும் எனவும் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில், ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகள் நடத்த புலிகள் முன்வரவேண்டும் என்றும், மனிதஉயிர்களைக்கொல்வதன்மூலம் எதையும்சாதித்து விட முடியாது என்பதை உணரவேண்டும்என்றும் குறிப்பிட்டார். வடக்கு, கிழக்கு போர் நிறுத்தப்பட்டால் போருக்காகச் செலவிடப்படும் 2500 கோடி ரூபாவை அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படலாம் என்றும் தெரிவித்தார்.

## வாக்காளரை மிரட்ட ஜனாதிபதி முயற்சி

### சிறிமாவோ குற்றச்சாட்டு

மாகாணசபைக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவின் கருத்துக்கள் ஜனாதி

ருக்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டா

குழப்பத்தில் ஆழ்த்தியுள்ள

## சமுகம் தரவும்

சிறிலங்கா பொலிஸ்திணைக்களத்தில் வேலைசெய்து ஒய்வு பெற்ற 55 வயதிற்...

## பொருளாதாரதடையை நீக்க மன்னார் ஆயர் பேச்சு

### புதிய ஜனாதிபதியை சந்திப்பார்

(கொழும்பு)

வடபகுதி மீதான சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்தும் ...களை நடாத்துவதற்காக மன்னார் ஆயர் மிகவிரைவில் கொழும்பு செல்லவுள்ளார்.

வடபகுதி மீது நீண்டகால ...

சீராக்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கும்படியும் வேண்டுகோள் விடுக்க உள்ளார். அத்துடன் மன்னார்

பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாவனல்லயில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்லுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் இறு

னால் ஆட்சியை மாற்றியமைக்க முடியாது. பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாரும் எதுவும் கூறத்தேவையில்லை. பாராளுமன்றத்தேர்தல் குறிப்பிட்ட திகதியில் நடந்தே தீரும். இதுதொடர்பான நடவடிக்கை எடுக்கும்

நானே தொடர்ந்து நிதியமைச்சராக இருக்கப் போகிறேன். அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகள் பிரச்சினைகளைத் தோற்றுவித்தால் அப்பகுதியின் அபிவிருத்திக்கு நிதிஎதுவும் ஒதுக்கப்படமாட்டாது" என்றார்.

பெரும் பிரச்சினையான வடக்குக் கிழக்கு பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்படல் வேண்டும், தீர்வுக்கான வழியும் பேச்சுவார்த்தை தான். ஆனால் அதற்கான வழி எது என்பதே இப்போதுள்ள கேள்வியாகும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு. கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் பிரபாகரனுடன் பேச்சு நடத்துவதற்கு எவரேனும் உதவ முன்வருவார்களேயானால் அது மிகவும் உன்னத

ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகள் நடத்த புலிகள் முன்வரவேண்டும் என்றும், மனிதஉயிர்களைக்கொல்

போருக்காகச் செலவிடப்படும் 2500 கோடி ரூபாவை அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படலாம் என்றும் தெரிவித்தார்.



# வாக்காளரை மிரட்ட ஜனாதிபதி முயற்சி

## சிறிமாவோ குற்றச்சாட்டு

மாகாணசபைக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவின் கருத்துக்கள் ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் தெரிவிக்க கூடியவை யல்ல. மிகவும் பொறுப்பற்றவிதத்தில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் இப்படியான கருத்தைத் தெரிவிப்பது மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும், இது ஒரு மறைமுகமாக வாக்காளரை மிரட்டும் செயலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எதிரணி வெற்றிபெற்றால் அரசிற்கு சங்கடம்

### பி. பி. ஸி. கணிப்பு

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஆட்சியை கைப்பற்றினால் உள்ளூர் வரியை உயர்த்தவும், மத்திய அரசின் பொருளாதாரத்திட்டத்தை தடுக்கவும், அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான அதிகாரத்தளத்தை அமைக்கவும் வாய்ப்பாகி விடும் என பி. பி. ஸி. செய்தியாளர் கூறுகிறார்.

ஆளும் கட்சி தேர்தலில் மோசமான பின்னடைவை கண்டால்அடுத்தவருட ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் அமைதியாக இருக்கமாட்டாது என அரசியல் அவதானிகள் குறிப்பிடடுள்ளனர்.

மாகாணசபைத்தேர்தல் – 1993

## மூன்று கட்டங்களாக முடிவுகள் வெளியாகும்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூன்று கட்டங்களில் வெளியிடப்படும் என்று தேர்தல் திணைக்களம்கூறியுள்ளது. தொகுதி அடிப்படையில் கட்சிகள் பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கை 18 ஆம் திகதி அதிகாலை 2.30 மணி முதல் வெளியிடப்படும். மாவட்ட ரீதியில் கட்சிகள் பெற்ற வாக்குகளும், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகாலை 4.30 மணிமுதல் வெளியிடப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத்தவறியோர் இன்று தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் எனத் தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## சமுகம் தரவும்

சிறிலங்கா பொலிஸ்திணைக்களத்தில் வேலைசெய்து ஓய்வு பெற்ற, 55 வயதிற்குட்பட்ட, சகல தரத்திலுமுள்ள இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் பழைய பூங்காவில் அமைந்துள்ள தமிழீழ காவல் துறையின் மக்கள் தொடர்பகத்திற்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதாரதடையை நீக்க மன்னார் ஆயர் பேச்சு

## புதிய ஜனாதிபதியை சந்திப்பார்

(கொழும்பு)

வடபகுதி மீதான சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்தும் பொதுமக்களின் போக்குவரத்தை சீராக்குவது குறித்தும் புதிய ஜனாதிபதியுடன் மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. ராயப்பு ஜோசப் அடிகளார் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்காக மன்னார் ஆயர் மிகவிரைவில் கொழும்பு செல்லவுள்ளார்.

வடபகுதி மீது நீண்டகாலமாக நடைமுறையில் இருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படியும் குடாநாட்டுக்கான பொது மக்களின் போக்குவரத்தை சீராக்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கும்படியும் வேண்டுகோள் விடுக்க உள்ளார். அத்துடன் மன்னார் தீவுக்கான பொதுமக்களின் போக்குவரத்தையும் சீராக்கும்படியும் கேட்டுக்கொள்ள இருப்பதாகவும் மன்னாரில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அவசரகால விதிகள்மீண்டும் திங்கள் முதல் அமுல்

மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு தளர்த்தப்பட்டிருக்கும் சில அவசரகாலச் சட்ட விதிகள் மீண்டும் திங்கட்கிழமை நள்ளிரவுமுதல் அமுல் செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலுக்காக பிரசாரம்தேர்தல்சட்டங்களுக்கு ஏற்ற விதத்திலும் கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளுக்கேற்பவும். நடைபெற ஏப்பிரல் 8ஆம் திகதியில் இருந்து இம் மாதம் 10ஆம்திகதி வரை அவசரகாலச்சட்டவிதிகள் சில தளர்த்தப் பட்டிருந்தன ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மேற்படி சட்டவிதி மீண்டும் அமுல்செய்யப்படவுள்ளது

## தமிழர் ஏற்கும் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்

### நவசமசமாஜக் கட்சி தெரிவிப்பு

வடக்குக் கிழக்கில் உள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே அவசியம் என்றும், அது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாக இருக்க வேண்டும் எனவும் நவ சமசமாஜக் கட்சியின் அமைப்பாளரும் அரசியல்குழு அங்கத்தவருமான லீ. வீ. திலக்கசிறி பி.

(4ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அதிகாரி யாழ். விஜயம்

(வடமராட்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி ஒருவர் நேற்று 'குமண' கப்பல்மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

பேர்னாட் நிக்கலஸ் என்பவரே நேற்று கப்பலில் வந்தவராவர். இவர் கப்பல்களுக்கு பொறுப்பானவர் என்றும் தெரியவருகிறது.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த இவர் துறைமுகப் பகுதியை சுற்றிப் பார்வையிட்டுவிட்டு யாழ். சர்வதேச செஞ்சிலுவை சங்க அலுவலகத்திற்கு வந்தார். (யோ)

## நவீன ஆயுதம் தாங்கிய பொலிசார் பாதுகாப்பு

தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக பொலிசார் கடும் நடவடிக்கை எடுப்பர் என்று தேர்தல் வேலைகளுக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் இக்னேசியல் கனகரத்தினம் கூறியுள்ளார்.

அவர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் வாக்குச் சாவடிகளில்மட்டுமன்றி அவற்றிற்கு வெளியேயும் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், ஒவ்வொரு ஆறு வாக்குச் சாவடியும்ஒரு நடமாடும் ரோந்துப் பிரிவு ஒன்றுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கும் என்றும், இவற்றில் நேரடி தொலைத் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும்என்றும்தெரிவித்தார்

இந்த நடமாடும் ரோந்துப் பிரிவில் ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜன், இரண்டு பொலிசார் நவீன ஆயுதங்களுடன் ஈடுபடுத்தப்பட்டிருப்பர் எனவும் குறிப்பிட்டுள்ளார். தேர்தல்கள் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் நேர்மையாக சுதந்திரமாக நடைபெற சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பிரேமா கொலை விசாரணை இரகசியப் பொலிசார் வசம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டமை தொடர்பான புலன் விசாரணைகளை சி. ஐ. டியினர் பொறுப்பேற்றுள்ளனர். குற்றப் புலனாய்வு பணியகம் இதுவரை மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் அப்பணியகத்தால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் அனைத்தையும் சி. ஐ டியினர் நேற்று முன்தினமிரவு பெற்றுக்கொண்டுள்ளனர். சி. ஐ. டி. யின் சிரேஷ்ட பணிப்பாளர் புஞ்சி பண்டாரா இவ் விசாரணைகளைப் பேற்றுக்கொண்டிருக்கிறார்.

மாகாண சபைத்தேர்தலில் வென்றால்

# பொதுத் தேர்தல் நடத்த அரசை வற்புறுத்துவோம்

## - சிறிமாவோ

(கொழும்பு)

திங்கட்கிழமை நடைபெற இருக்கும் ஏழு மாகாணசபைத் தேர்தல்களில மக்கள் எதிர்க் கட்சிகளுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்வதன் மூலம் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதியதேர்தல் நடத்தத் தாம் அரசை வற்புறுத்த முடியும் என எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கருத்துத் தெரிவித்திருக்கிறார். அவரது மேற்படி கருத்தை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க நேற்று நிராகரித்தார்.

பாராளுமன்றத் தேர்தல் பற்றிய பேச்சுக்கே இடம் இல்லை. அது திட்டமிட்டபடி 1995 மார்ச்சில் நடைபெறும் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் மூலம் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால்,

(4ஆம் பக்கம் பார்க்க)

# "பிரேமா கைபோல் என் கை இரத்தக்கறை படிந்ததல்ல"

## முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர் பதவிகள, பொறுப்புக்கள் பறிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைப்போன்று நானும் மக்கள் மத்தியில் செல்வேன். ஆனால் நான் பிரேமதாசா அல்ல. எனது கையில்என்றும் இரத்தக்கறை படிந்தது கிடையாது என ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தகவலை வெளியிட்ட 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் இவ்வாறு டி.பி. விஜயதுங்க குறிப்பிட்டமையானது பிரேமதாசா குழுவினருக்கும் அவரது பதவியை எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் பலத்த அடியாக அமைந்துள்ளதாகத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### Your Watches & Radios?

Repairs of Watches&Radios Guaranteed DILKA WATCH& RADIO WORKS, 284 Stanley Road, Ariyakulam Junction, Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (சி-6608)

### கார்கசற் ரேடியோக்களா கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/6584)

### வியாபாரிகட்கு

லேஸ், நூல் வகைகள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள - ஜெயா அழகு சாதனமாளிகை 177A, மின நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6613)

### துளிர்

சிறுவாகளுக்கான அறிவியல் மாத இதழ். மற்றும் சுபமங்களா, குன்றின் குரல், விருட்சம், சலனம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம், புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (4871)

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 16-05-1993 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கலைவி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ( 4889 )

### தவறிவிட்டது

## அதிகரித்த சம்பளப்படி அமைச்சு நியமித்தோருக்கே

மத்திய கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டு கடமை புரியும் பயிலுநர் ஆசிரியர்களுக்கும், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும் மட்டுமே 1993 இல் இருந்து அதிகரிக்கப்பட்ட ரூபா 300 இம் மாதச் சம்பளத்துடன் வழங்கப்படுவதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08-05-1940 தோற்றம் 28-01-1950

மறைவு:- 28-05-1992

திதி: 17-05-1993

### திரு. விசயரெத்தினம் நவரத்தினராசா

[நத்தினி]

### திருமதி நாகலட்சுமி நவரத்தினராசா

28-05 1992 அன்று அகாலமரணமடைந்த எனது தந்தை, தாயாரின் ஆட்டத்திவஷம் நாளை 17-05-1993 அன்று திங்கட்கிழமை A. G. A. ஒழுங்கையில் அமைந்துள்ள எனது மாமாவின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் வந்து கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

நெடியகாடு, வல்வெட்டித்துறை. (சி-6620)

மகள்: ந. வனிதா

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
## PATRICIAN INSTITUTE

### அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் (CARE International) ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சித் தகைமை: 15 வயதும் அதற்கு மேற்பட்டோரும், 8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்.
- பயிற்சிக் காலம்: 2½ மாதங்கள்
- கொடுப்பனவுகள்: ஸ்தாபனப் பயிற்சியின் போது (2½ மாதங்கள்) மாதம் ரூ 600/- உம் பயிலுநர் பயிற்சியின் போது (10 மாதங்கள்) வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவு திகதி: 28-05-1993
- நேர்முகப்பரீட்சை திகதி: 29-05-1993

விண்ணப்பங்கள் யாவும்

பதிவாளர்:

**பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்**

இல: 59, செண் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

கீழ்வரும் பயிற்சி நெறிகள் 22-05 1993 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

**DIPLOMA IN COMPUTER STUDIES**

- ★ BASIC ★ WORD PROCESSING
- ★ LOTUS 1 2-3 ★ d BASE III PLUS

Duration: 9 Months

WEEK DAYS & WEEK END CLASSES

(Theory and Practicals)

**COMPUTER COURSES**

(1) Computer Programming in BASIC Language and MS - DOS
(2) d BASE III PLUS and MS - DOS
(3) LOTUS 1-2-3 (Spred Sheet Analysis and MS-DOS) Duration: 4 Months
(4) Word Processing and MS - DOS (Word Star 4000) Duration: 3 Months

**SHORT HAND AND TYPING** (English)

சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

**CITY AND GUILDS OF LONDON EXAMINATION YEAR (93-94)**

## மலேரியா நுளம்பு ஒழிப்பிற்கு புதிய வகை இரசாயனம்

(கொழும்பு)

மலேரியாவைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக பரீட்சார்த்தமாகப் பயன்படுத்தப்பட்ட புதிய வகை இரசாயனப் பொருள்கள் பெரும் பயனை அளித்திருப்பதாக கூறப்படுகின்றது. குருநாகல் மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக பயன்படுத்தப்பட்ட இந்த இரசாயனங்களை நாட்டின் இதர பகுதிகளிலும் பயன்படுத்துவதற்கு மலேரியா தடுப்பு இயக்கம் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. 1977 ஆம் ஆண்டு முதல் மலேரியா பரப்பும் நுளம்புகளை ஒழிக்க பயன்படுத்தப்பட்டு வந்த மலத்தியோன் மருந்திற்கு நுளம்புகள் இசைவாக்கப்பட்டு விட்டதாலேயே புதிய இரசாயனம் பாவிக்கப்படவேண்டி இருப்பதாக மலேரியா தடுப்பு இயக்கம் கூறியுள்ளது. இந்தப் புதிய இரசாயனம் தெளிக்கப்பட்ட காலத்திலிருந்து ஐந்து மாதங்கள் வரை பயனளிக்கக் கூடியது என்றும், தெளிக்கப்படுவதால் சுவர்களின் நிறத்தில் மாற்றம் எதையும் ஏற்படுத்தாது என்றும் துர்நாற்றம் வீசாது என்றும் கூறப்படுகிறது.

## தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கு கல்வித் தகைமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

- மொழிபெயர்ப்பாளர்கள் : ஆங்கிலம் – தமிழ், சிங்களம் - தமிழ்
- மொழிபெயர்ப்பாளர்கள் : தொழில் நுட்பம். இயந்திரவியல்.
- அச்சுக்கோப்பாளர்கள்.
- ஓவியர்கள் (வயது 18 - 30)

விண்ணப்ப முடிவு திகதி : 28-05-1993 க்கு முதல்

விளம்பர இல. 187
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(4878)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 07 – 04 – 1943



தாயக மண்ணில் 28 – 05 – 1992

### அமரர் இ.செ. ஆனந்தவேல்

திதி: 17-05-1993

அன்புருவே ஐயாவே

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மற்றும் சுபமங்களா, குன்றின் குரல், விருட்சம், சலனம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம், புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (4871)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 16-05-1993 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4889)

## தவறிவிட்டது

13-05-1993 யாழ்ப்பாணத்திலிருந்து K. K. S வீதியில் மருதனார்மடத்திற்கு இடையில் எனது மோட்டார் சயிக்கிள் புத்தகம் தவறிவிட்டது. இல 8/3078 கண்டெடுத்தவர்கள் திரு. வை. மகேந்திரன் யாழ். மத்திய பஸ்நிலையக் காரியாலயம், என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4890)

## உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமெற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6633)

## கருத்தரங்கு

யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் 'பக்தியும் பாவனை உத்தியும்' என்னும் பொருள் பற்றியதொரு கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் க. இரகுபரன் கருத்துரை வழங்கவுள்ளார். எதிர் வரும் புதனன்று பிற்பகல் இரண்டு மணியளவில் இக் கருத்தரங்கு இடம் பெறும்.

## 'மாற்றம்' வெளிவருகிறது

'மாற்றம்' சஞ்சிகை வெளியீடு எதிர் வரும் 19ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 5 00 மணிக்கு இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் எனத் தமிழ்த்தாய் மன்றச் செயலாளர் திரு. மல்லிகை வைந்தன் தெரிவித்துள்ளார்.

---

28-05 1992 அன்று அகாலமரணமடைந்த எனது தந்தை. தாயாரின் ஆட்டத்திவஷம் நாளை 17-05-1993 அன்று திங்கட்கிழமை A. G. A. ஒழுங்கையில் அமைந்துள்ள எனது மாமாவின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும், வந்து கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

நெடியகாடு. மகள்: ந. வனிதா
வல்வெட்டித்துறை. (சி-6620)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



## 2-ம் லெப். கணேசன் (நிக்லஸ்)

[பாலச்சந்திரன் ரகுதாஸ்]

மண்ணில் மைந்தனாக: 13.12.1973 — மாவீரனாக: 01.06.1992

திதி: 21. 05. 1993

தாயை நிகரெங்கள்
தாயகத்தை காதல் செய்தாய்!
தூய தலைவனின் அடிச்சுவட்டில்
துணிவுடனே நீ நடந்தாய்!!
ஓயுதல் செய்யோம் -உன்
இலட்சியம் ஈடேறும் வரையில்!!!

இவருடன் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

21.05 1993 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு போராளிகள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

அம்பாள்குளம்,
2-ம்பகுதி கிளிநொச்சி. (4827)

---

கீழ்வரும் பயிற்சி நெறிகள்
22-05 1993 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

**DIPLOMA IN COMPUTER STUDIES**

- BASIC
- WORD PROCESSING
- LOTUS 1 2-3
- d BASE III PLUS

Duration: 9 Months
WEEK DAYS & WEEK END CLASSES
(Theory and Practicals)

**COMPUTER COURSES**

(1) Computer Programming in BASIC Language and MS - DOS
(2) d BASE III PLUS and MS - DOS
(3) LOTUS 1-2-3 (Spred Sheet Analysis and MS-DOS) Duration: 4 Months
(4) Word Processing and MS - DOS (Word Star 4000) Duration: 3 Months

**SHORT HAND AND TYPING** (English)
சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

**CITY AND GUILDS OF LONDON EXAMINATION YEAR** (93 94)

(1) Quantity Surveying
(2) Electrical Electronic Engineering Technician (Part I. II Part III)

மேலதிக விபரங்கட்கு:

பதிவாளர்,
பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59. சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR
PATRICIAN INSTITUTES
59, St. Patrick's Road,
Jaffna.

(சி-6631)

## அஞ்சலி

## லெப். கேணல் நவம் (டடி)

காற்று ஏன் இன்று அமைதியாய் உறங்கிறது
கருமேகம் ஏனோ வாட்டமுடன் அசைகிறது
கவிபாடும் கவிஞனுக்கு கவிவர மறுக்கிறது
கானம் பாடும் வானம்பாடி இன்று அழுகிறது
காவியச் செல்வர்கள் கலங்கு கின்றனர்
காரணம்..... ஓ .....டடி (நவம்) அண்ணனை
இழந்த நினைவு நாளன்றோ இன்று!

முல்லைக்கு ...தளபதியாய்
களத்திற்கு......வீர வேங்கையாய்
இந்திக்கு... சூரனாய்
சதி நஞ்சருக்கு......கதை முடிப்பவனாய்
மக்களுக்கு......அன்பனாய்
அன்னியர்க்கு... அரக்கனாய்
கொக்குத்தொடுவாய் ...புதல்வனாய்
மணலாற்று......முதல் லெப். கேணலாய்
அறுபத்தி ஒன்றில் திருமகனாய் உதித்தாய்
எண்பத்தி ஒன்பதில் புலிமகனாய் மறைந்தாய்

மறவனே மண்ணைவிட்டு மறைந்தாலும்
உந்தனை மறப்போமா?
ஐந்து ஆண்டுகள் சென்றாலென்ன
ஐம்பது யுகம் கழிந்தாலென்ன
உந்தனது நினைவு — என்றும்
நெஞ்சை விட்டு அகலா — எம் மண்ணில்
அன்னியனின் கால்பதிய விடோம்
என உறுதி கொள்கி றோம்
உந்தனது கல்லறையில்
உம் துப்பாக்கி எம் கரத்தில்
தவழ்கிறது இன்று எதிரியின் கதை முடிக்க!

(4885) —மணலாறு கவியரசன்

---

தாயின் மடியில் 07 — 04 — 1943



தாயக மண்ணில் 28 — 05 — 1992

## அமரர் இ.செ. ஆனந்தவேல்

திதி: 17-05-1993

அன்புருவே ஐயாவே
எம்மையெல்லாம் பாரினிலே தவிக்கவிட்டு
பாவியவன் குண்டுக்கு பலியாகிப்போனீர்களே
ஐயா உங்கள் மரணம் அஸ்தமனமல்ல
நாளைய விடிவிற்கான அத்திவாரம்

17-05-1993 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத் திதியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

கோணேஸ்வரன் வீதி,
வல்வெட்டித்துறை.

(4792)

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-16

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் இயக்கச்சியில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டுநகர்ப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

டயஸ் (— ராஜ்-மட்டு)

வெற்றிலைக்கேணியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன அதே இடத்தைச் சேர்ந்தவரும் போக்கருப்புப்பகுதி கிராம சேவகருமான தமிழ்ப்பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு புத்தூர் வாதரவத்தைப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன இளம் பெண் 03 இளைஞர்கள் மற்றும் சுட்டுக் கொல்லப்பட்ட பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த சங்கானைப் பகுதி தபால் நிலைய அதிபர்.

1992 ஆம் ஆண்டு மட்டு-தம்பசிட்டி சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய.

கவிமாறன்/பிரியந்தன் [தங்கராசா குணராசா-வெல்லாவெளி-மட்டு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6628)

## சிந்தனைக்கு

உணவுப் பண்டங்களை படமாக வரைந்து காட்டுவதால் பசியைப் போக்கிவிட முடியாது.
-சீனப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# புதிய பிரதமர் பாடும் பழைய பல்லவி

எந்த ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானாலும், ஒன்று பிரச்சினையின் அடிப்படையைக் கண்டறிய வேண்டும்; இரண்டு பிரச்சினைக்குரியவரிடமே பேசித் தீர்வு காண வேண்டும். இவை இரண்டுமே பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், அப்பிரச்சினை மீண்டும் எழாமல் தடுப்பதற்குமான வழிவகையும் ஆகும்.

இதனைச் சிறிலங்காவின் புதிய பிரதமருக்குச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமானதாகவுள்ளது. ஏனெனில் அண்மையில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அரசாங்கத்தின் முன்னுள்ள பிரச்சினை பற்றி அவர் பிரஸ்தாபித்ததையிட்டே இதனைக் கூறவேண்டியுள்ளது.

புதிய அரசாங்கத்தின் இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாட்டை பிரஸ்தாபித்த பிரதம மந்திரி ''வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைத்தீர்விற்கு தமிழ் குழுக்களுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுவார்த்தைகளில், இரு விடயங்கள் கேள்விக்குறியாகவுள்ளன.'' என்றார். ஒன்று வடக்கு மாகாணமும், கிழக்குமாகாணமும் தனித்தனியாக இருக்கவேண்டுமா? அன்றி இணைக்கப்பட்டவையாக இருக்க வேண்டுமா? என்பது. இரண்டு, இப்பேச்சு வார்த்தைகளின் மூலம் எட்டப்படும் தீர்வை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்களா? இவையே முன்னுள்ள பிரச்சினை என அவர்தெரிவித்தவையாகும்.

புதிய பிரதமர் தெரிவித்துள்ள இவ்விரு பிரச்சினைகளும் புதிய பிரச்சினைகளும் அல்ல, புதிய பிரதமரின் கண்டுபிடிப்பும் அல்ல. முன்னைய ஆட்சியாளர்களும் இது குறித்தே குழம்பிப்போய் இருந்தனர். இதன் சரியான தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்தமையால் அல்லது ஏற்றுக் கொள்ள மறுத்தமையால் அவர்களால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை.

ஆனால், இது குறித்து தமிழ் மக்களும், விடுத

உள்ளக பயிற்சியை முடித்துக்கொண்ட

# 16 வைத்திய மாணவருக்கு வெளிமாவட்ட நியமனம்

[யாழ்ப்பாணம்]
யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ளக பயிற்சிக்காக நியமிக்கப்பட்ட 26 மருத்துவ மாணவர்களும் தமது உள்ளக பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இவர்களில் 10 பேர் மருத்துவர்களாக நிரந்தர நியமனம் பெற்று யாழ். போதனா மருத்துவ மனையில் தமது பணியை தொடர ஏனைய 16 பேரும் பிறமாவட்டத்திற்கு மாற்றம் பெற்றுள்ளார்கள்

யாழ் பல்கலைக் கழகத்தில் மருத்துவத்துறையில் பயின்று வெளியேறிய இவர்கள் தமது உள்ளக பயிற்சியை இதுவரை யாழ். போதனா வைத்திய சாலையில் பெற்று வந்தது தெரிந்ததே. மேற்படி வெளிமாவட்டங்களுக்கு மாற்றம் பெற்றுச் செல்லும் 16 பேருக்கும் சிறிலங்கா இராணுவ முப்படை தலைமைச் செயலகம் ''நகர'' கப்பலில் செல்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதியளவில் தமது பயணத்தை மேற்கொள்ள உள்ளார்கள் என தெரியவருகின்றது. [சி]

## கப்பல் மூலம் உணவு; நடவடிக்கை பாதிப்பு

[யாழ்ப்பாணம்]
குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப்பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வரும் செயற்பாடு பாதிப்படைந்துள்ளது.

தென்னிலங்கையில் திடீரென ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு நிலை காரணமாகவே இப்பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இவற்றைவிட கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறும் தொழிலாளர்களது வேலை நிறுத்தமும் மேற்படி பாதிப்புக்கு காரணமாக அமைந்தது என்றும் மேற்படி செயற்பாட்டுடன் நெருங்கிய அதிகாரிகள் தெரிவித்தனர். இப்பாதிப்பு காலப்போக்கில் சீராகும் என்றும் தெரிய வருகிறது

கொழும்பில் வேலை பார்த்த

## மலையக இளைஞர்கள் பலர் பதுளை அனுப்பப்பட்டனர்

[கொழும்பு]
கொழும்பில் தொழில் பார்த்த பல மலைநாட்டுத் தமிழ் இளைஞர்கள், அவர்கள் சொந்த ஊரான பதுளைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை, ஆமர்வீதி, பஞ்சிகாவத்தை ஆகிய இடங்களில் வேலை பார்க்கும் மலையகத் தமிழ் இளைஞர்களை அவர்களை வேலைக்கு அமர்த்தியவர்கள் பதுளைப் பகுதியிலுள்ள அவர்கள் வீடுகளுக்கு அனுப்பியுள்ளார்கள். ஆமர் வீதிக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தேஇந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## இந்திய ஜனாதிபதியின் விஜயம் ஒத்திவைப்பு

[டில்லி]
இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தனது சிறிலங்கா விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி பிரேமதாஸ கொலையுண்டதையடுத்து ஏற்பட்ட அரசியல் உறுதியற்ற நிலை காரணமாகவே அவர் கொழும்புக்கான தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக கூறப்படுகிறது.

### சைக்கிள் திருட்டு

(தென்மராட்சி)
தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த புதன்கிழமை துவிச்சக்கரவண்டி ஒன்று திருட்டுப் போய்யுள்ளது. இப்பணிமனையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களின் கூட்டமொன்றிற்கு வந்திருந்த கெற்பலிப் பகுதி கிராம சேவையாளரின் துவிச்சக்கரவண்டியே காணாமற் போயுள்ளது. இதே வேளை கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி சந்தைப் பகுதியிலும் இரண்டு துவிச்சக்கர வண்டிகள் திருட்டுப் போயுள்ளன. (மு)(86)

### விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் விசேட வருடாந்த பொதுக் கூட்டம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை 9.00 மணிக்கு கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ரி. சிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

சகல பிரதேச செயலாளர் பிரிவுச் சங்கங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30பிரதிநிதிகளையும் தவறாது சமுகம் தரும்படி கிளைச்சங்க செயலாளர் திரு. வி.ரி. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

கோப்பாய் பிரதேசத்தின்

## வாழை அழிவு நிவாரணக் செவ்வாய் கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]
கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவு வாழை அழிவுக் கொடுப்பனவு எதிர்வரும் 18 ஆம் திகதி கீழ்குறிப்பிடப்படும் நிலையங்களில் வழங்கப்படவுள்ளது. விண்ணப்பதாரிகள் நேரடியாக பின்வரும் ஆவணங்களுடன் காலை 8 மணிக்கு அந்நிலையங்களுக்கு சமுகம் தந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேசிய அடையாளஅட்டை, குடும்பப்பதிவு அட்டை, உலர் உணவு அட்டை ஆகியவற்றுடன் தங்களுக்குரிய கீழ் குறிப்பிடப்படும் நிலையங்களுக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம்.

கோப்பாய் வடக்கு கிராம சேவகர் உத்தியோகத்தர் அலுவலகத்தில் கோப்பாய் வடக்கை சேர்ந்தோரும், கோப்பாய் விவசாய உற்பத்தி நிலைகத்தில் கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி கல்வியங்காட்டை சேர்ந்தவர்களும், நீர்வேலி வடக்கு கிராமசேவகர் உத்தியோகத்தர் அலுவலகத்தில் நீர்வேலிவடக்கை சேர்ந்தவர்களும், நீர்வேலி தெற்கு கிராமசேவகர் உத்தியோகத்தர் அலுவலகத்தில் நீர்வேலி மேற்கை சேர்ந்தவர்களும், உரும்பராய் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தில் உரும்பராய் கிழக்கு, உரும்பராய் வடக்கு, உரும்பராய்மேற்கு, உரும்பராய்தெற்கை சேர்ந்தவர்களும் ஊரெழு கிராமசேவகர் உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஊரெழுவை சேர்ந்தவர்களும் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். [சி[

### உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கான சித்திரை மாத முதல் இரண்டு வார இலவச உலர் உணவுப் பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப் பட்டுவருகின்றன.

இடம்பெயர்ந்தோருக்கான இலவச நிவாரண உணவு முத்திரை மூலம் வழங்கப்படும் மேற்படி விநியோகத்தில் அரிசி, மா, சீனி, சோப் ஆகிய பொருள்களுடன் ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 'கைலன்ட்' பால் மா ஆகிய பொருள்கள் வழங்கப் படும். (22)

### கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)
வயிரவன் கதிரமலை வசந்தபுரம் தெல்லிப்பழை என்பவரது அடையாளஅட்டையுடன் கூடியபேஸ் ஒன்று சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

### விளையாட்டு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான மெய்வல்லுநர் போட்டியும் வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் இன்று மானிப்பாய் இந்துக்கல்லூரிமைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்ச்சிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பதில் செயலர் திரு.கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. சு. கனகராசா, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. சி. கேசவராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்;

சுழிபுரம் சத்தியா விளையாட்டுக்கழகம் நடாத்தும் 11 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

# விமானத்தாக்குதல்நடந்தால் ஐ. நா. படை தாக்கப்படும்

ராஜீவ்காந்தி கொலையுண்டமைக்கு

## சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு நீக்கப்பட்டமையே காரணம்

-மணிசங்கர் ஐயர்

[டில்லி]

''வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைத்தீர்விற்கு தமிழ் குழுக்களுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுவார்த்தைகளில், இரு விடயங்கள் கேள்விக்குறியாகவுள்ளன.'' என்றார். ஒன்று வடக்கு மாகாணமும், கிழக்குமாகாணமும் தனித்தனியாக இருக்கவேண்டுமா? அன்றி இணைக்கப்பட்டவையாக இருக்க வேண்டுமா? என்பது. இரண்டு, இப்பேச்சு வார்த்தைகளின் மூலம் எட்டப்படும் தீர்வை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்களா? இவையே முன்னுள்ள பிரச்சினை என அவர்தெரிவித்தவையாகும்.

புதிய பிரதமர் தெரிவித்துள்ள இவ்விரு பிரச்சினைகளும் புதிய பிரச்சினைகளும் அல்ல, புதிய பிரதமரின் கண்டுபிடிப்பும்அல்ல. முன்னைய ஆட்சியாளர்களும் இது குறித்தே குழம்பிப்போய் இருந்தனர். இதன் சரியான தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்ளாமல் இருந்தமையால் அல்லது ஏற்றுக் கொள்ள மறுத்தமையால் அவர்களால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை.

ஆனால், இது குறித்து தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் சரியாக விளங்கிக் கொண்டுள்ளதோடு, சரியான நிலைப்பாட்டையும் கொண்டுள்ளனர். இது குறித்து பல தடவை அரசிற்குத் தெரிவித்துமுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணம் என்பவை தமிழர் தாயகம் ஆகும். இதில் பிரிவினை என்பதற்கோ அன்றி விட்டுக் கொடுப்பு என்பதற்கோ இடம் இல்லை. இதில், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் சில கூட உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்நிலையில், வடக்கு-கிழக்குமாகாணங்களை தனித்தனி மாகாணங்கள் ஆக்குதல் என்பது இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையப் போவதில்லை. நெருக்கடிகளை மேலும் வலுவடையச் செய்யவே உதவக் கூடும். இதனை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் வரை இனப்பிரச்சினைத் தீர்விற்கு இவ் விவகாரம் நீக்கமுடியாத முட்டுக்கட்டையாக இருக்கும்.

அடுத்ததாக, தமிழ்க் குழுக்களுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுவார்த்தையை விடுதலைப்புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. மேலேகுறிப்பிட்டதுபோலவேபிரச்சினைக்குரியவர்களுடனேயேபிரச்சினையைப்பேசித்தீர்க்க வேண்டும்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு இதுகுறித்து முன்னர் ஒருதடவை அனுபவரீதியான நல்ல பாடம் ஒன்றும் உள்ளது. அதாவது தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இந்தியாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டதே அதுவாகும். இதன்மூலம், இனப்பிரச்சினைக்கு சிறிலங்காவினால் தீர்வுகாண முடியவில்லை. அதைச் சிக்கலாக்கவே முடிந்தது.

இவையாவும் இதுவரையில் அனுபவ ரீதியாக பெற்றிருக்கவேண்டிய பாடம், கடந்தகால அரசாங்கங்களும், சிங்களத் தலைவர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதற்கு வெகுவாக உதவக்கூடியன. இந்நிலையில் புதிய பிரதமர் உண்மையிலேயே பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால், இக்கேள்விகளுக்குரிய பதிலாக வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பை மேற்கொள்வதும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுமே ஒரே வழியாகும். இதைவிடுத்து கேள்விகளுடன் நின்றுகொள்வதால் தீர்வுகிடைத்து விடப்போவதில்லை.

---

...னர்.

புறக்கோட்டை, ஆமர்வீதி, பஞ்சிகாவத்தை ஆகிய இடங்... வீதிக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தேஇந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

# இந்திய ஜனாதிபதியின் விஜயம் ஒத்திவைப்பு

[டில்லி]

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தனது சிறிலங்கா விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி பிரேமதாஸ கொலையுண்டதையடுத்து ஏற்பட்ட அரசியல் உறுதியற்ற நிலை காரணமாகவே அவர் கொழும்புக்கான தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக கூறப்படுகிறது.

---

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை 9.00 மணிக்கு கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ரி. சிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

சகல பிரதேச செயலாளர் பிரிவுச் சங்கங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30பிரதிநிதிகளையும் தவறாது சமுகம் தரும்படி கிளைச்சங்க செயலாளர் திரு. வி.ரி. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

---

... ஆகிய பொருள்கள் வழங்கப்படும். (22)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வயிரவன் கதிரமலை வசந்தபுரம் தெல்லிப்பழை என்பவரது அடையாளஅட்டையுடன் கூடியபேஸ் ஒன்று சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

---

...காரி திரு. ச. கனகராசா, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. சி. கேசவராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சுழிபுரம் சத்தியா விளையாட்டுக்கழகம் நடாத்தும் 11 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

---

# விமானத்தாக்குதல்நடந்தால் ஐ. நா. படை தாக்கப்படும்

## சேர்பியத் தலைவர் எச்சரிக்கை

[சரயேயோவா]

மேற்கு நாடுகள் பொஸ்னியாவில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டால் அவற்றின் ஆயிரக்கணக்கான படைவீரர்களை இழக்க நேரிடலாம் என்று தீவிர சேர்பிய தேசிய வாதியான செசல்ஜி எச்சரிக்கை செய்துள்ளார்.

தமது சேர்பிய தீவிரவாதக் கட்சியின் ஆதரவாளர்கள் சுமார் ஐயாயிரம் பேர் முன்னிலையில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

மேற்கு நாடுகள் விமானத் தாக்குதலை நடத்தினால் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படைவீரர் எவரும் பாதுகாப்பாக இருக்க மாட்டார் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் நேச நாடுகள் முஸ்லிம்களுக்கு ஆதரவாகச் சேர்பியப் படைகள் மீது தாக்குதல் நடத்தினால் மேற்குநாடுகளின் குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் அச்சுறுத்தல் தெரிவித்தார்.

இதேவேளை பொஸ்னியாவில் பக்தா நகரில் நேற்று முன்தினமும் தொடர்ச்சியாக ஐந்தாவது நாளாகச் சண்டை நடைபெற்றது. குரோசியாத் தளபதிகளும், எதிர்த் தரப்புப் படைத் தளபதிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பின்னரும் கூட சண்டைகள் தொடர்ந்து நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஐ. நா வின் அனுசரணையுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும், பொஸ்னியாவில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்படாவிட்டால் குரோசிய, பொஸ்னிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஐரோப்பிய சமூகம் எச்சரிக்கை செய்திருப்பதும் தெரிந்ததே.

# சென்னைக்கு குடிநீர் தர வீராணம் திட்டம் அமுலாகும்

— செ. அரங்கநாயகம்

(சென்னை)

தமிழக அரசு தற்போது அறிவித்திருக்கும் வீராணம் திட்டத்திற்கும், முன்னைய தி. மு. க அரசு அமுல் நடத்திப் பின்னர் கைவிட்ட வீராணம் திட்டத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், தற்போதைய அரசு இந்த திட்டத்தை முற்றிலும் புதிய முறையில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளது என்றும், தி. மு. கவின் ஆட்சிக் காலத்தில் அமுல் நடத்திப் பார்த்து பின்னர் கைவிடப்பட்ட சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் வீராணம் திட்டத்தை தமிழக அரசு மீண்டும் அமுல்படுத்த முனைவதாக வாழப்பாடி இராமமூர்த்தி கூறியிருப்பது சாரமற்றது என்றும் தெரிவித்தார்.

# வர்மா கமிஷன் சிபார்சு அமுல் நடத்த முடிவாம்

[டில்லி]

ராஜீவ்காந்தி கொலை தொடர்பான வர்மா விசாரணைக்கமிஷனின் சிபார்சுகளை அமுலாக்க மத்தியஅரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என உள்துறையமைச்சர் எஸ்.பி. சவான் நேற்று மக்களவையில் தெரிவித்தார். தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழக அதிகாரிகளை பொறுத்தவரை தவறு செய்த அதிகாரிகள் மீது தமிழக அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது என்றும் அமைச்சர் சவான் அப்போது குறிப்பிட்டார்.

# சென்னை நகரில் குடிநீர் தட்டுப்பாடு

[சென்னை]

சென்னைநகரில் பெரும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், தண்ணீர் லாரிகளுக்காகப் பலமணிநேரம் காத்திருந்தும் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதாகவும் பொதுமக்களிடையே அடிக்கடி கைகலப்புகள் நேர்வதாகவும் பி. பி. ஸியின் சென்னை முகவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெற்றுப் பானைகளுடன் குடிநீருக்காக காலை முதல் மாலை வரை பொதுமக்கள் அலைந்து திரிவதாகவும் கூறப்படுகின்றது. சென்னை நகரில் கோடை காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவது வழமையே ஆனாலும் இம்முறை குடிநீர்த் தட்டுப்பாடு பெருமளவில் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

---

ராஜீவ்காந்தி கொலையுண்டமைக்கு

# சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு நீக்கப்பட்டமையே காரணம்

—மணிசங்கர் ஐயர்

[டில்லி]

ராஜீவ்காந்திக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளை வி. பி. சிங் தலைமையிலான அரசு நீக்கியதே அவர் கொலையுண்டமைக்கு அடிப்படைக் காரணமாகும் என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரான மணிசங்கர் ஐயர் தெரிவித்தார். நேற்று முன்தினம் இந்தியப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்,

திரு. வி. பி. சிங் தலைமையிலான அரசு இந்த விடயத்தில் அரசியலைப் புகுத்தி ராஜீவ்காந்திக்குத் தேவையான விதத்தில் பாதுகாப்பு வழங்கத் தவறியமையைக் குற்றம் சாட்டினார். சிறப்புப் பாதுகாப்புக் குழுவினர் விலக்கிக் கொள்ளப்பட்டமையினால்தான் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார் என்றும் இதனை ஒரு அடிப்படைக் காரணம் என்று கொள்ளாமல் துணைக் காரணம் என்று கொள்வது பொருந்தாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக வர்மா கமிஷனின் அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதன் மீதான விவாதம் தொடர்கையில், மணிசங்கர் ஐயர் மேலும் கூறுகையில், சிறப்புப் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டமைக்கும், மற்றப் பாதுகாப்புக் குறைபாடுகளுக்கும் காரணமாக இருந்த அரசுகளுக்குத் தலைமை வகித்த வி. பி. சிங், சந்திரசேகர் மற்றும் அவர்களது உள்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது எனவும் வினா எழுப்பினார்.

# அகதிகள் பராமரிப்புக்கு மாதம் 9கோடி செலவாகிறது

அதிகாரி தெரிவிப்பு

[சென்னை]

சுமார் பதினையாயிரத்திற்குமதிகமான இலங்கை அகதிகள் தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் என தமிழ்நாடு மாநில வருவாய்த் துறை சிறப்பு ஆணையாளர் ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில்செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு வந்திருந்த ஓர் இலட்சத்து பத்தாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் ஏற்கனவே 30 ஆயிரம் பேர் திரும்பிச் சென்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அகதிகளை பராமரிக்க மாதம்தோறும் ஒன்பது கோடி செலவாகின்றது என்பதை குறிப்பிட்டுப் பேசிய அவர் அகதிமுகாம்களில் போராளிகள் பிரிவினை ஊன்றாதபடி கண்காணிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய உயர்நீதிமன்றநீதிபதி பதவி துறக்க முடிவு

(டில்லி)

இந்திய உயர்நீதிமன்ற நீதிபதி வி. இராமசுவாமி தமது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு விரைவில் அனுப்பப்போவதாகவும் இனிமேல் நீதிமன்றத்திற்கு செல்லப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

சிரித்திரன் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களுக்கான இதழ் வெளிவந்துள்ளது வழக்கம்போல முன்முறுவலுடன் ஆரம்பமாகும் இவ்விதழில் ஜோசப் பாலாவின் 'மகிழ்வின் மறுபக்கம்', வளவை வளவனின் 'துறவு', கலைமீட்டல், பின் சிரிப்பு என்பவற்றுடன் 'கப்பலேறும் மனிதசக்தி' பற்றிய நிலைக்கண்ணாடியும், மகுடி பதில்களும் மற்றும் பல துணுக்குச் செய்திகளும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர்களுக்கான கூட்டம்

பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவுப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு யானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

முன்னோடிப் பரீட்சை, கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர்ப் போட்டி, தமிழ்த் தினப்போட்டி ஆகிய விடயங்கள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

## இருதய நோயால் மரணம்

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த வயோதிபப் பெண் திடீரென ஏற்பட்ட இருதய நோயின் தாக்கத்தினால் வீதியில் விழுந்து மரணமான சம்பவம் பொலிகண்டி கடற்கரையில் நடைபெற்றது.

இராசலிங்கம்-புவனேஸ்வரி அம்மா (வயது 72) என்ற மாதுவே இவ்வாறு மரணமானார். மேல் விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா இயற்கை மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (யோ)

## வீரவணக்கக் கூட்டம்

அச்சுவேலியை உள்ளடக்கிய உடுப்பிட்டி வட்டத்தில் மே மாதத்தில் வீரச்சாவடைந்த எட்டு மாவீரர்களுக்கான மாதாந்த வீரவணக்கக் கூட்டம் நாளை இரவு 7.30 மணி

# பிரேமாவின் கொலை குறித்து சில சஞ்சிகைகளின் ஊகம்!

(சென்னை)

பிரேமதாசாவின் கொலைக்குப் புலிகள்தான் முதன்மையாகச் சந்தேகிக்கப்படுகிறார்கள். கொலை நடத்தப்பட்ட விதமும் புலிகளைப் பெருமளவில் சந்தேகிக்கவைக்கின்றது. பிரேமதாசாவின் கொலைக்குப் புலிகள் காரணமென்று பெருமளவில்சந்தேகிக்கப்படுவதால் கொலையாளியைக் கண்டு பிடிப்பதில் யாரும் தீவிரம் காட்டவில்லை என்று சென்னையில் இருந்து வெளிவரும் புரண்ட் லைன் சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

கொலையாளியை அடையாளம் காணும் வகையில் கொலையாளியின் புகைப்படம் ஈ.பி.டி.பி, புளொட், ரெலோக் குழுக்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொலையாளி உறுதியானதேகத்துடன் சவரம்செய்த முகத்துடன் சிங்களஆள்போலவே தோன்றுகின்றார் என்று தமிழ்த்தரப்புக்கள் கூறுகின்றன என்றும்.

கொலை நடத்தப்பட்ட விதம் புலிகளையே ஒருமனதாகச் சந்தேகிக்க வைக்கின்றது. ஆனாலும் சிங்கள இளைஞன் ஒருவன் இவ்வளவுதூரம் உறுதியாகத் திறம்பட விஞ்ஞான ரீதியாக இந்தக் கொலையை நடத்தியிருந்தால் அது குறித்து நாம் புதிய கோணத்தில் ஆராயவேண்டும் எனப் பொலிஸ் மற்றும் இராணுவத் தரப்புக்கள் கூறுகின்றன என்றும் புரண்ட் லைன் தெரிவிக்கின்றது.

பார் ஈஸ்ரேர்ண் எக்கனோமிக் ரிவியூ என்ற பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது:

புலிப் போராளி போலவே கொலையாளி சயனைட் குப்பி அணிந்திருந்ததால், கொலையாளி விடுதலைப் புலி எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். புலிகள் இதை மறுக்கின்றார்கள். ஆனால் இந்தக் கொலையைப் புலிகள் செய்திருந்தால், இந்தக் கொலையைவிட வேறு ஒரு அம்சமே மிக ஆபத்தானது. புலிகள் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை இந்தஅளவிற்கு எதிர்ப்பார்கள் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் என்று அச்செய்திகூறுகின்றது.

முதலில் பிரேமதாசா கொலையுண்ட செய்தி வந்ததும் மக்களில் பலரும் உற்சாகமடைந்து ஆச்சரியப்பட்டனரே தவிர கோபமடைந்தது போல் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1980-90 களில் ஜே.வி.பி. போராளிகளை ஒடுக்க ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக்கொன்றுகுவித்தபிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல, திடீரென்று தன்னைக் கைகழுவிய பிரேமதாசாவைக் காட்டில்திரிந்துவரும்ஜே வி.பி. போராளிகளுடன் சேர்ந்து கொலை செய்திருக்கலாம் என்று ஜூனியர் விகடன் தெரிவித்திருக்கிறது

ஜூனியர் விகடன் புலிகள் குறித்தும் இராணுவம் குறித்தும பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது:

## ஆப்கானில் மீண்டும்மோதல் காபூல் நகரில் பெரும் தீ

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த நான்கு தினங்களுக்கும் மேலாக இம்மோதல்கள நீடித்து வருகின்றபோதும் அரசாங்கத் துருப்புக்களின் நிலையிலோ அல்லதுகெரில்லாக்களின் நிலையிலோ எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவும், நேற்றுமுன்தினமிரவும் கடும் பீரங்கித் தாக்குதல்களும் பெரும் மோதல்களும் இடம்பெற்றுள்ளன. இந்தத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டதாகவும், நகரின் பல இடங்களிலும் தீப்பற்றியிருப்பதாகவும். தீ அணைக்கும் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டபோதும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதிருந்ததாகவும், சுமார் இருநூறுக்கும் அதிகமானோர் காயங்களுடன் வைத்தியசாலைகளில சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்திய இராணுவத் தளபதி

## பீல்ட்மார்ஷல் கரியப்பா நேற்று காலமானார்

[டில்லி]

பீல்ட் மார்ஷல் கே. எம். கரியப்பா நேற்று பங்களூரில் ... திங்கட்கிழமை முழு இராணுவ மரியாதையுடன் நடைபெறும்.

இந்திய முப்படைகளின் முதலாவது தலைமைத் தள

## அமெரிக்காவிலிருந்து வந்த தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

பொரளையில் தங்கியிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் சிறிலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி கச்சாயைப் பிறப்பிடமாக கொண்ட பொன்னையா குலநாதன் (வயது 30) எனும் இவர் அமெரிக்க பிரஜா உரிமை பெற்றவராவார். 1985முதல் அமெரிக்காவில் வசித்துவரும் இவர் 1991இல் கொழும்பு வந்து திருமணம் முடித்துச் சென்றவர் எனவும் தனது திருமண தினத்தைக் கொண்டாட அண்மையில் கொழும்பு வந்தபோது பொலிசாரால் கைதானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல்மூலம் யாழ். வந்த

## அரச உத்தியோகத்தரை சமுகமளிக்கக் கோரிக்கை

திருமலையிலிருந்து நரோமா (நகர) கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்த அரச உத்தியோகத்தர்களை நாளைமறுதினம் மாலை குமண கப்பல் மூலம் பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறைக்கு கொண்டு செல்வதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இக்கப்பலில் செல்லப் பெயர் பதிந்தவர்களை நாளை காலை 10 00 மணிக்குச் செயலகத்தில் சமுகமளிக்கும்படி மேலதிக அரசாங்க அதிபர் வேண்டியுள்ளார்.

## தமிழீழ கல்வித் தேர்வு விண்ணப்ப முடிவு மே 25

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 25-05-1993 ஆகும். சகல பாடசாலைகளுக்கும் இது பற்றிய அறிவுறுத்தல்கள் அனுப்பப்பெற உள்ளன தனிப்பட்ட தேர்வாளர்கள் விண்ணப்பிக்க முடியாது. பாடசாலை மாணவர்கள் தான் விண்ணப்பிக்கலாம். எனவே பாடசாலை மாணவர்கள் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த திகதிக்குமுன் விண்ணப்பங்களை அனுப்பும்படி வேண்டப் பெறுகின்றனர். விண்ணப்பக் கட்டணம் நூறு ரூபாவாகும்.

## வெளிநாட்டிலிருந்து வந்த தமிழ் இளைஞர் கொலை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு ஒன்றில் இருந்து நாடு திரும்பிய கச்சாய்ப் பகுதி இளைஞர் ஒருவர் கொழும்பு நகரில் வைத்து மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்

சின்னத்தம்பி அமிர்தலிங்கம் (வயது 32) என்ற இளை ... பினார். இவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கி ஓட்டோ மூலம் கொழும்பு நகருக்குச் செல்ல முயற்சித்தார். இச்சந்தர்ப்பத்தில் இவர் ஓட்டோவுடன் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டதாகவும் பின்னர் இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிய

## ஐக்கிய தேசியக் கட்சி மகாவலி போன்றதாம்

ஹமீட் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மகாவலியை போன்றது என்று நீதி உயர்கல்வி அமைச்சரான ஏ. ஸி எஸ். ஹமீத் வர்ணித்தார். அக்குரஸ்ஸ தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர்களிடையேபேசிய அவர்மேலும் கூறுகையில், பெரும் வெள்ளப் பெருக்குகள் ஏற்படலாம், கொடிய வரட்சி ஏற்படலாம் ஆனால் மகாவலியின் வளம் குறைவடையாது. அதே போலவே ஐ. தே. கவும் இருக்கின்றது என்றும் தெரிவித்

## தனியார் வானொலி ஆரம்பம்

[கொழும்பு]

இலங்கையில் முதன் முறையாக தனியார் வானொலி ஒன்று விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது. சி. என். எல். என்ற பெயரில் ஆரம்பிக்கப் படவிருக்கும் இவ்வானொலிச் சேவையை டெலிக்கா நெற்வேக் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனம் நடத்தவுள்ளது. இவ்வானொலிச் சேவை ஏற்கனவே பரீட்சார்த்த சேவையாக பிலியந்தனை பொல்கொடவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரேமா - புலிகள் உறவு; 'ஏசியாவீக்' பிரஸ்தாபம்

இந்திய இராணுவத்துடன் விடுதலைப்புலிகள் மோதிக் கொண்டிருக்கையில், ஹெலிக்கொப்டர் மூலமாக சில உதவிகளை விடுதலைப்புலிகளுக்குச் செய்ததாகவும், பெருமளவு ஆயுதங்கள், வெடிமருந்துகள் விடுதலைப் புலிகளுக்கு விநியோகித்ததாகவும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாபற்றி எழுதிய கட்டுரையில் 'ஏசியா வீக்'' சஞ்சிகை தெரிவித்துள்ளது

மே மாதம் 12ஆம் திகதிச் சஞ்சிகையில் மேலும், கடந்த 2500வருடகால இலங்கையின் வரலாற்றில் பிரேமதாசாவின் ஆட்சிக்காலமே மிகவும் மோசமான ஆட்சிக்காலம் என்றும்,

இவரது ஆட்சிக் காலத்தில் 1989 ஆம் ஆண்டு ஜூலை முதல்வாரத்தில் மட்டும் சுமார்5000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும், அதுகுறித்து ஜனாதிபதிபிரேமதாசா மௌனம் சாதிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சுமார் 42அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைத்ததன் மூலம் தனியார் துறையின் ஆதிக்கத்தை அதிகரிக்கச் செய்தமையும் இவரது ஆட்சிக்காலத்திலேயே என்றும்,

அத்துடன் நாட்டின் பொருளாதாரத் துறையில் நடைபெற்ற பலஊழல்களுக்கு திரு. பாஸ்கரலிங்கத்துடன் இணைந்து பிரேமதாசா செயற்பட்டுள்ளார். மகாராஜா நிறுவனம் மற்றும் ஏ. கே தர்மதாச போன்ற வர்த்தகர்களை பெரும் வர்த்தகர்களாக மாற்றியமை குறித்த தகவல்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுமார் 47 பாராளுமன்ற உறுப்பினர்களை மறைமுகமாக அச்சுறுத்தி தனக்கு ஆதரவாக செயற்படும்படி வற்புறுத்தியமை பற்றியும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பத்திரிகையாளரான றிச்சாட் டி சொய்சாவைக் கைது செய்ததும் பின்னர் அவர் கொலைசெய்யப்பட்ட தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளதாகக்குறிப்பிடப்பட்டுள்ளது,

பொது

ஜனாதிபதி ஆட்சிமுறையிலிருந்து பாராளுமன்ற ஆட்சி முறைக்கு அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்கப்போவதாகவும் சிறிமாவோ தெரிவித்தார்.

ஏழு மாகாணங்களில் ஐந்து மாகாணங்களைத் தாம் கைப்

## ஒரு தொகுதி மருந்து வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனைக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் வந்துள்ளன.

விசர்நாய்க்கடி மருந்து மற்றும் ஏர்ப்புதடுப்பூசி மருந்து சேலைன், மற்றும் அன்ரிபாற்றிக் போன்ற மருந்துகள் வந்துள்ளதாகதெரியவருகின்றது.

னால் வீதியில் விழுந்து மரண மான சம்பவம் பொலிகண்டி கடற்கரையில் நடைபெற்றது.

இராசலிங்கம்-புவனேஸ்வரி அம்மா (வயது 72) என்ற மாதுவே இவ்வாறு மரண மானார். மேல் விசாரணை களை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா இயற்கை மரணம் எனத் தீர்ப்பு வழங் கினார். (யோ)

## வீரவணக்கக் கூட்டம்

அச்சுவேலியை உள்ளடக் கிய உடுப்பிட்டி வட்டத்தில் மே மாதத்தில் வீரச்சாவடை ந்த எட்டு மாவீரர்களுக்கான மாதாந்த வீரவணக்கக் கூட் டம் நாளை இரவு 7.30 மணி யளவில் உடுப்பிட்டி வட்ட அரசியற்றுறைஉதவிப்பொறுப் பாளர் திரு. க. இசையமுதன் தலைமையில் உடுப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில் நடை பெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் உறுப் பினர்களின் நினைவுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

### அலங்கார உற்சவம்

அராலி கனவத்துறை ஞான வயிரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமைஆரம்பமாகி எதிர்வரும் 25ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பொங்கலுடன் நிறைவு பெறும்.

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகியுள் ளன. கடந்த நான்கு தினங் களுக்கும் மேலாக இம்மோதல் கள நீடித்து வருகின்றபோதும் அரசாங்கத் துருப்புக்களின் நிலையிலோ அல்லதுகெரில்லா க்களின் நிலையிலோ எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனவும், நேற்றுமுன்தினமிர வும் கடும் பீரங்கித் தாக்குதல் களும் பெரும் மோதல்களும் இடம்பெற்றுள்ளன. இந்தத் தாக்குதல்களில் பலர் கொல் லப்பட்டதாகவும், நகரின் பல இடங்களிலும் தீப்பற்றியிருப் பதாகவும். தீ அணைக்கும் இயந்திரங்கள் ஈடுபடுத்தப் பட்டபோதும் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர முடியா திருந்ததாகவும், சுமார் இரு நூறுக்கும் அதிகமானோர் காயங்களுடன் வைத்தியசா லைகளில சேர்க்கப்பட்டிருப்ப தாகவும் கூறப்படுகிறது.

இந்திய இராணுவத் தளபதி

## பீல்ட்மார்ஷல் கரியப்பா நேற்று காலமானார்

[டில்லி]

பீல்ட் மார்ஷல் கே. எம். கரி யப்பா நேற்று பங்களூரில் காலமானார். இறுதிச் சடங்கு கள் கர்நாடக மாநிலத்தில் குடகம் மாவட்டத்தில் உள்ள அவரது சொந்த ஊரில் வரும் திங்கட்கிழமை முழு இராணுவ மரியாதையுடன் நடைபெறும்.

இந்திய முப்படைகளின் முதலாவது தலைமைத் தள பதியாக இவர் கடமையாற்றி யவர் என்பது குறிப்பிடத்தக் கது.

தமிழ் நாட்டிலுள்ள

## அகதிகளை திருப்பி அனுப்ப யு. என். எச். சி. ஆர் உதவும்

(சென்னை)

இந்தியாவிலிருக்கும் இலங் கைத் தமிழ் அகதிகளை மீண் டும் தாயகத்திற்கு அனுப்பு வதில் தமிழக அரசுக்கு யு.என். எச் சி. ஆர் உதவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மத்திய அர சின் அனுமதி பெறப்பட்ட பின்னரே அகதிகளை மீண்டும் அனுப்பி வைக்கும் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தமிழக அரசின் அதி காரியான சி. என். ராமதாஸ் கூறியுள்ளார்.

### சமூகம்

நாளை காலை 10.00 மணிக்கு தவறாது சமூகந்தருமாறும்,

அனைவரும்தத்தமது அடை யாள அட்டைகளையும் கொண்டு வருமாறும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

### மூன்று

படும். இறுதியாக மாவட்ட ரீதியில் கட்சிகள் பெற்ற வாக்குகளும் ஒவ்வொரு உறுப் பினரும் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளும், தெரிவும் அதிகாலை 6.30 மணிமுதல் வெளிவரத் தொடங்கும். 18ஆம்திகதி மாலைக்குள் முழு முடிவுகளும் அறிவிக்கப்பட்டு விடுமென்றும், 17ஆம் திகதி இரவு பத்து மணிமுதல் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்கு களின் எண்ணிக்கை வெளி யிடப்படும் என்றும் தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது.

### 2000 ஆம் ஆண்டில்

எயிட்ஸ் நோயாளி 1986இல் கண்டுபிடிக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டளவில் உலக நாடு களிலுள்ள எயிட்ஸ் நோயாளி களின் எண்ணிக்கை 40 சத வீதத்தால் அதிகரிக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது இந்த நோயைக் குணப்படுத்தும் மருந்தைக் கண்டு பிடிக்க நீண்டகாலம் எடுக்கும் என நிபுணர்கள்தெரிவிக்கின்றனர்.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 25-05-1993 ஆகும். சகலபாடசாலை களுக்கும் இது பற்றிய அறி வுறுத்தல்கள் அனுப்பப்பெற உள்ளன தனிப்பட்ட தேர் வாளர்கள் விண்ணப்பிக்க முடியாது. பாடசாலை மாண வர்கள் தான் விண்ணப்பிக்க லாம். எனவே பாடசாலை மாணவர்கள் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த திகதிக்குமுன் விண்ணப்பங் களை அனுப்பும்படி வேண் டப் பெறுகின்றனர். விண்ணப் பக் கட்டணம் நூறு ரூபா வாகும்.

## வெளிநாட்டிலிருந்து வந்த தமிழ் இளைஞர் கொலை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு ஒன்றில் இருந்து நாடு திரும்பிய கச்சாய்ப் பகுதி இளைஞர் ஒருவர் கொழும்பு நகரில் வைத்து மர்மமான முறையில் படு கொலை செய்யப்பட்டுள்ளார்

சின்னத்தம்பி அமிர்தலிங் கம் (வயது 32) என்ற இளை ஞர் கடந்த நான்கு வருடங் களின் பின்னர் நாடு திரும் பினார். இவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந் திறங்கி ஒட்டோ மூலம் கொழும்பு நகருக்குச் செல்ல முயற்சித்தார். இச்சந்தர்ப்பத் தில் இவர் ஒட்டோவுடன் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டதாக வும் பின்னர் இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. [86]

## எறிகணை வீச்சிற்கு வயோதிப மாது காயம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் நேற்றுக் காலை நடந்த எறிகணை, துப்பாக்கி பிரயோகத்தின் போது வயோதிபப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 8 மணியள வில் பொன்னாலை பாலத்தை அண்டிய பகுதியிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதன்போது நாகம்மா (வயது 80) மூளாய் மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்தவரே காயமடைந்தவராவார். இவர் தற்போது யாழ். போதனா மருந்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (சி)

### தமிழர்

பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும்கருத்துத் தெரி விக்கையில், வடக்குக் கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு அரசி யல் தீர்வு அவசியமானதாகும் என்றும், அது தமிழ் மக்களின் பூர்வீகஉரிமைகளையும், அவர் கள் ஏற்றுக்கொள்ளும் கருத் துக்களையும் மையமானதாகக் கொண்டிருக்க வேண்டும் என் றார்.

இந்நாட்டின் பிரஜைகளாக அவர்கள் கருதப்பட வேண்டும் என்றும், அவர்களின் பாரம் பரிய பகுதி அவர்களுக்கு வழங் கப்பட வேண்டும்

எனவே அவர்களின் பகுதி கள் ஒன்றிணைக்கப்பட வேண் டும். இணைக்கப்பட்ட பகுதிக ளில் அவர்களால்தெரிவுசெய்ய ப்பட்ட பிரதிநிதிகளுக்குஆட்சி உரிமை வழங்கப்படவேண்டும் மத்திய அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டையும் திணிக்கக் கூடாது.

தற்போது வழங்கப்பட் டுள்ள உரிமைகள் போதாது. இது ஒரு போலியானதாகக் காணப்படுகின்றது என தெரி வித்தார்.

### பிரேமா

தெரிவித்தார்.

மேலும் ஐவன்தெரிவிக்கையில்

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க, பிரேமதாசாவின் ஆதரவாளர்களை களையெடு க்கும் நடவடிக்கையில் இறங்கி யுள்ளார். இந்நடவடிக்கையின் போது ஜனாதிபதியின் தனிப் பட்ட பாதுகாப்பிற்குப் பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லோறன்ஸின் தலைமையில் இயங்கிய விசாரணைக் குழு வைக் கலைத்துள்ளார். இத னைத் தொடர்ந்து பிரேம தாசாவின் மருமகன் அங்கம் வகித்த எயர்லங்காவின்பணிப் பாளர் சபையைக் கலைத்துள் ளார். மேலும் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம். ரூப வாஹினி வானொலி ஆகிய வற்றில்இருக்கும் பிரேமதாசா வின் ஆட்களை வெளியேற்றும் நடவடிக்கையில்ஈடுபட்டுள்ளார்

இவரின் இந்நடவடிக்கையி னால் கோபமடைந்துள்ள பிரேமாவின் ஆதரவாளர்கள் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் டி. பி. விஜயதுங்க விற்குப் பாடம் படிப்பித்து அதில் ஏற்படும் தோல்வியை அடுத்து டி பி. விஜயதுங்கவை வெளியேற்றி பின்னர் ஹேமா பிரேமதாசா தலைமையில் செயற்படலாம்.

இதேவேளை ஹேமா பிரே மதாசா அரசியலில் 'பிரவேசிப் பதையோ, ஜனாதிபதியாக வருவதையோ ரணில்விக்கிரம சிங்கவோ, சிறிசேன குரேயோ விரும்பவில்லை. எனவே இவர் கள் டி. பி. விஜயதுங்கவுடன் சேர்ந்து பிரேமதாசாவிற்கு நெருங்கியவர்களை கட்சியை விட்டு அல்லது முக்கிய பதவி களிலிருந்து வெளியேற்றலாம் என தெரிவித்தார்.

முதல்வாரத்தில் மட்டும் சுமார்5000க்கு மேற்பட்ட சிங் கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும், அதுகுறித்து ஜனாதிபதிபிரேம தாசா மௌனம் சாதிப்பதாக வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சுமார் 42அரச நிறு வனங்களை தனியாரிடம் ஒப் படைத்ததன் மூலம் தனியார் துறையின் ஆதிக்கத்தை அதி கரிக்கச் செய்தமையும் இவரது ஆட்சிக்காலத்திலேயே என்

### பொது

ஜனாதிபதி ஆட்சிமுறையிலிரு ந்து பாராளுமன்ற ஆட்சி முறைக்கு அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்கப்போவதாக வும் சிறிமாவோ தெரிவித் தார்.

ஏழு மாகாணங்களில் ஐந்து மாகாணங்களைத் தாம் கைப் பற்றுவோம் என்றும் அவர் சவால் விடுத்தார்.

மன்ற உறுப்பினர்களை மறை முகமாக அச்சுறுத்தி தனக்கு ஆதரவாக செயற்படும்படி வற்புறுத்தியமை பற்றியும் தக வல் வெளிபிடப்பட்டுள்ளது.

பத்திரிகையாளரான றிச் சாட்டி சொய்சாவைக் கைது செய்ததும் பின்னர் அவர் கொலைசெய்யப்பட்ட தகவல் களும் வெளிபிடப்பட்டுள்ள தாகக்குறிப்பிடப்பட்டுள்ளது,

## ஒரு தொகுதி மருந்து வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனைக்கு ஒரு தொகுதி மருந் துப் பொருள்கள் வந்துள்ளன.

விசர்நாய்க்கடி மருந்து மற் றும் ஏர்ப்புதடுப்பூசி மருந்து சேலைன், மற்றும் அன்ரிபாற் றிக் போன்ற மருந்துகள் வந் துள்ளதாகதெரியவருகின்றது. (சி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 15-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9447

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-9625, 28-2956, 24-0528, 40-5216, 42-1320, 24 9337, 26-0423, 24-5734, 26-6526, 24-4908, 41-3931, 42-3964, 27-0994, 26-9658, 43-0916.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

22-5857, 26-7540, 26-1349, 27-1027, 24-5529, 40-2677, 26-0525, 26-3177, 24-8631, 26-1221, 26-5046, 27-6704, 26-7627, 42-1019, 24-1040, 24-0878, 26-9633, 26-6983, 24-7299, 24-4367, 41-6784

## மரண அறிவித்தல்

## Dr. ஆழ்வாப்பிள்ளை நடராசா

தம்பசெட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த டாக்டர் ஆழ்வாப்பிள்ளை நடராஜா நேற்று 15-5-1993 சனிக் கிழமை அவரது இல்லத்தில் காலமானார். இவர் காலஞ் சென்ற ஆழ்வாப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பாலாம்பிகையின் அருமைக் கணவரும் ஆவார்.

அன்னார் பாலேந்திரா [லண்டன்], கவீந்திரா(லண் டன்) தெய்வேந்திரா [லண்டன்], இந்திராதேவி [கனடா], இந்துமதி. இந்திராணி, பாமதி [லண்டன்]. சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்தினி [லண்டன்], ஜெயலக்சுமி[லண்டன்] லோகராசா[கனடா], கணேசராசா [சட்டத்தரணி], கோபாலகிருஷ்ணன் [லண் டன்] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று சனிக் கிழமை அவரது இல்லத்தில் வைத்து நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ. கணேசராசா
(சி-6634) [சட்டத்தரணி]


ஸ்ரீதர் திரையரங்கில்

In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6575]

இன்று (16-5-93) ஞாயிறு பி. ப. 2.00 மணிக்கு
கந்தரோடை மைதானத்தில்
சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய ஆதரவில்
நடைபெறும்
மாட்டுவண்டி சவாரிபோட்டி
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.
நியூலங்கா ஒலி அமைப்பாளர்
ஐயனார் கோவிலடி, மல்லாகம்.
[சி-6632]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 16 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.